# இலங்கையில் நல்லாட்சியினை கட்டியெழுப்புதல்:- ஒரு விமர்சன பகுப்பாய்வு

# BUILDING GOOD GOVERNANCE IN SRI LANKA: A CRITICAL ANLYSE

**A.M. Aswar, M.R.F. Ramziya**
Department of Politics and Peace Studies
South Eastern University of Sri Lanka
fathimaramziya92@gmail.com, aswarmutur@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

இன்றைய புதிய அரசியல் ஒழுங்கில் செல்வாக்கு பெற்ற எண்ணக்கருவாக நல்லாட்சி தத்துவம் காணப்படுகின்றது. நல்லாட்சி என்பது மக்கள் நலன் பேணும் நல்ல அரசினை குறிக்கின்றது. மேற்கத்தேய நாடுகளில் நல்லாட்சியினை கட்டியெழுப்பக் கூடிய சாத்தியப்பாடு காணப்பட்டபோதிலும் மூன்றாம் மண்டல நாடுகளில் நல்லாட்சியினை நிறுவுவதில் சிக்கல்கள் பல காணப்படுகின்றன. நல்லாட்சியின் ஊடாக ஜனநாயக பொறிமுறையினை சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்த முடியும். இந்தவகையில் நல்லாட்சியினை கட்டியெழுப்புவது அரசின் முக்கிய பணியாக இன்று அடையாளப்படுத்தப்படுகின்றது. மூன்றாம் மண்டல நாடுகளில் நல்லாட்சியினை நிறுவுவதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையின் புதிய தேசிய அரசாங்கமானது நல்லாட்சியினை ஆட்சி தத்துவமாக கொண்டு ஆட்சி அமைக்க விளைகின்றது. இதனால் இன்று இலங்கை அரசியலில் பிரதான பேசுபொருளாக நல்லாட்சி மாறியுள்ளமையை காணலாம். இலங்கை பன்மைத்துவ சமூக கட்டமைப்பினுள் முதிர்ச்சியடையாத அரசியல் கலாசாரத்தை கொண்ட நாடு என்றவகையில் நல்லாட்சியினை நிறுவுவதில் சிக்கல் தன்மை காணப்படுகின்றது. இந்தடிப்படையில் இலங்கையின் நல்லாட்சியினை நிறுவுவதில் உள்ள சிக்கல்களை ஆய்வு செய்கின்ற பண்புசார் முறையிலமைந்த பகுப்பாய்வாக இவ்வாய்வு கட்டுரை இடம்பெற்றுள்ளது.

***பிரதான சொற்பதங்கள்***: *நல்லாட்சி, ஜனநாயகம், மூன்றாம் மண்டல நாடுகள், பன்மைத்துவ சமூகம், முதிர்ச்சியடையாத அரசியல் கலாசாரம்*

## அறிமுகம்

ஜனநாயகத்தின் பண்புகளின் மறுவடிவமாகவும், ஜனநாயகத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான கருவியாகவும் நல்லாட்சி கோட்பாடானது அடையாளப்படுத்தபடுகின்றது. நல்லாட்சி என்ற எண்ணக்கருவானது நீண்ட காலம் பழமை வாய்ந்த போதிலும் 1980 காலப்பகுதிகளிலே முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக மாற்றம் காணத் தொடங்கின. இன்றைய கால கட்டத்தில் மேற்கு நாடுகளை விட மூன்றாம் மண்டல நாடுகளில் காணப்படும் உள்நாட்டு மோதல்கள், பொருளாதார மந்தநிலை, வளப்பற்றாக்குறை மற்றும் மக்களின் அரசியல் பங்குபற்றுகை போன்றன நல்லாட்சியின் அவசியத்தினை வலியுத்துகின்றன. இவ்வாறான நெருக்கடிகளில் இருந்து மூன்றாம் உலக நாடுகளை மீட்டெடுக்கும் நோக்கத்தில் ஐக்கிய நாடுகள் சபை தனது அபிவிருத்தி திட்டத்தில் நல்லாட்சி பற்றிய எண்ணக்கருவினை வெளியிட்டது. இதன் பின்னர் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, அபிவிருத்தியை

நோக்கமாக கொண்ட நிறுவனங்களும் இவ் எண்ணக்கருவை முன்னெடுப்பதில் ஈடுபட்டன.
நல்லாட்சி பற்றிய பிளட்டோவின் கருத்தாடல்களில் ''அறிவுடையோர்கள் பொதுநலனை நோக்காக கொண்டு ஆட்சி நடாத்தும் போது ஆளப்படும் சமுகத்தில் நல்லாட்சி நிலவும்'' எனவும் THOMES G. WEISS குறிப்பிடும் போது '' யாதாயினும் ஒரு சமுகத்தில் வாழும் ஒட்டு மொத்த மக்களின் நம்பிக்கை, விருப்பு, நட்புறவு, ஒத்துழைப்பு ஆகியவற்றை அறிந்து கொண்டு முன்னடுக்கப்படும் ஆட்சியாகவும் மேலும் ஒரு சமுகத்தால், அரசினால் அல்லது நிறுவனங்களினால் செயற்படுத்தப்படுவதாகவும் காணப்படும் ஆட்சிமுறையே'' நல்லாட்சி என வரைவிலக்கணப்படுத்துகின்றனர்.

பொதுவாக நல்லாட்சி என்பது நீதியான ஆட்சி, சட்டத்தினை வலுப்படுத்தல், ஒப்பந்தங்களை சீர்படுத்தல், சொத்துரிமை, மனித உரிமைகளை மதித்தல், மற்றும் ஊழலுக்கு எதிராக போராடுதல் என்பதனை அடிப்படையாக கொண்ட ஆட்சி முறையாகும்'' (PAVL O NELL, 2002) எனவும் கூறப்படுவதோடு மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தல், ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் இடையிலன உறவினை பேணுதல் மற்றும் இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தினை ஏற்படுத்துவதான ஆட்சி முறையாக காணப்படுகின்றது.
மேலும் பங்கேற்பு, சட்டத்தின் ஆட்சி, பொறுப்பு கூறுதல், வெளிப்படைத் தன்மை, இயங்கு தன்மை, செயற்திறன், பாரபட்சமற்ற நீதித்துறை, அரசியல் யாப்பு மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு போன்ற பல்வேறு பண்புகளைக் கொண்டதாக காணப்படுகின்றது. இத்தகைய ஜனநாயக பண்புகளைக் கொண்டு இன்றைய அரசுகளை நோக்கும் போது நல்லாட்சி என்பது கோட்பாட்டு தன்மையிலே காணப்படுகின்றது.

இலங்கையானது 2009 காலப்பகுதியில் யுத்ததினை முடிவுக்கு கொண்டு வந்தபோதிலும் நல்லாட்சியினை ஏற்படுத்துவதில் கால தாமத்தினை கொண்டிருந்தது. இதன் பின்னர், ஜனநாயகத்தின் பண்புகளை நிலை நாட்டுவதின் அவசியமானது மக்களாலும், அரசியல் கட்சிகளினாலும் மற்றும் சர்வதேச நிறுவனங்களினாலும் உணரப்பட்டமையினால் 2015 காலப்பகுதிகளில் நல்லாட்சியினை கட்டியெழுப்புவதற்காக புதிய ஆட்சி மாற்றம் கொண்டு வரப்பட்டதனைக் காணலாம். இத்தகைய ஆட்சி மாற்றமானது, இலங்கையில் நல்லாட்சியினை கட்டியெழுப்புவதற்காக முன்னெடுக்கும் செயன்முறைகள், எதிர் கொள்ளும் சவால்கள் மற்றும் சவால்களை வெற்றி கொள்வதற்கு தேவையான பரிந்துரைகளை முன்வைப்பதாக இப்பகுப்பாய்வானது '' இலங்கையில் நல்லாட்சினை கட்டியெழுப்புதல்- ஒரு விமர்சன பகுப்பாய்வு'' எனும் தலைப்பில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**ஆய்வின் முக்கியத்துவம்.**

இவ் ஆய்வானது இலங்கையில் நல்லாட்சியினை கட்டியெழுப்புவதற்கு தடையாக காணப்படும் காரணங்களை இனங்காண்பதோடு, அக்காரணங்களை வெற்றி கொள்வதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதன் ஊடாக முக்கியத்துவம் பெறுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

இனமோதலானது 2009 காலப்பகுதியில் முடிவுக்குகொண்டு வரப்பட்டதிலிருந்து நல்லாட்சி அரசாங்கத்தினை அமைத்துக்கொள்வதற்கான பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. இச்செயற்பாடுகளின் அடிப்படையிலே இலங்கையில் சிறந்த ஜனநாயக ஆட்சியின் அவசியத்தினை வலியுறுத்தி 2015ல் புதிய ஆட்சி மாற்றம் ஏற்படுத்தபட்டதோடு இப்புதிய அரசாங்கமானது

இலங்கையில் நல்லாட்சியினை கட்டியெழுப்புவதற்கான பல்வேறு வகையிலான செயற்பாட்டு திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற போதிலும் முழுமையான ஜனநாயகப் பண்புகள் நிறைந்த நல்லாட்சியினை கட்டியெழுப்புவது சவால் மிக்க ஒன்றாகவே காணப்படுகிறது எனும் ஆய்வுப் பிரச்சினையை மையமாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

இலங்கையில் அமைக்கப்பட்ட ஜனநாயக பண்புகள் நிறைந்த புதிய அரசாங்கமானது நல்லாட்சியினை கட்டியெழுப்பும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் எதிர் கொள்ளும் சவால்களை இணங்காண்பதே இவ் ஆய்வின் பிரதான நோக்கமாக கொள்ளப்படுகின்றது.
மேலும் இவ்வாறான சவால்களை வெற்றி கொள்வற்காக எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதனை பரிந்துரைகளாக முன்வைப்பதனை துணை நோக்கமாக கொண்டு இவ் ஆய்வானது முன்னடுக்கப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

இவ்ஆய்வுக்கான தரவுகள் சேகரிப்பானது முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவுகளின் அடிப்படையில் அவதானம் மற்றும் பேட்டிகாணுதல் போன்றன மூலமும் இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வுத் தலைப்போடு சம்மந்தமான நூல்கள், ஆய்வு கட்டுரைகள், பத்திரிகைத் தகவல்கள் மற்றும் இணையத்தளக் குறிப்புகள் போன்றவற்றில் இருந்தும் தரவுகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பகுப்பாய்வும் முடிவுகளும்**

இலங்கையில் நல்லாட்சியினை கட்டியெழுப்புதல் எனும் தலைப்பில் இவ்வாய்வானது பல்வேறு முறைகளில் சேகரிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாக கொண்டு பகுப்பாய்வு மேற்கொண்டதன் மூலமாக பல முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இப்பகுப்பாய்வுகளின் அடிப்படையில் இலங்கையில் சிறந்த ஜனநாயக பண்புகள் நிறைந்த நல்லாட்சியினை கட்டியெழுப்புவதற்கு தடையாக அரசியல், பொருளாதார, சமுக, சமய மற்றும் சர்வதேச காரணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இலங்கை சட்டத்தின் ஆட்சியினை நிலை நிறுத்துவதில் பல சவால்களை எதிர் நோக்கி உள்ளதைக் காணலாம். கடந்த கால ஆட்சிமுறையில் காணப்பட்ட சர்வதிகார போக்குடைய தன்மை மற்றும் ஆட்சியாளர்களிடம் காணப்பட்ட தனிப்பட்ட அரசியல் நலன்கள் போன்றன ஜனநாயகத்திற்கு எதிரான செயற்பாடுகளுக்கு காரணமாக அமைந்திருந்தன. ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் மக்களுக்கு பொறுப்பு கூறும் செயற்பாடுகளில் இருந்து விடுபட்டவர்களாக செயற்படுகின்ற தன்மையானது ஆட்சி நிர்வாகத்திலும் ஏனைய நிர்வாக கட்டமைப்பிலும் வினைத்திறன் மற்றும் விளைதிறன் அற்ற நிர்வாக போக்கு நாட்டின் வளர்ச்சி போக்கில் செல்வாக்கு செலுத்துவதைக் காணலாம்.
நாட்டில் காணப்படுகின்ற அதிகரித்த பௌத்த தேசியவாத சிந்தனைகளும் நல்லாட்சிக்கான வாய்ப்புக்களை குறைத்துள்ளன. சமுக ஒருமைப்பாட்டினை சீர்குலைப்பதாக இனத்துவ அரசியல் மேற்கொள்ளப்படுகின்றமை மற்றும் இனத்தினை மையமாக கொண்ட அரசியல் போராட்டங்கள் அதிகரித்ததோடு தேசிய கட்சிகளினதும், கட்சி உறுப்பினர்களுடைய செயற்பாடுகளும் நாட்டில் பிரிவினை வாதங்களை தோற்றுவித்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

யுத்தம் முடிவடைந்த சமாதான காலகட்டத்திலும் மக்கள் மத்தியில் அரசியல் தொடர்பான நிலவரங்கள் மற்றும் பங்கு பற்றுகை போன்றன குறைவானதாகவே காணப்படுகின்றன. பெண்களின் பங்கு பற்றுகையானது மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றன. மேலும் நீதித் துறையின் செயற்பாடுகள், அதிகரித்த இலஞ்ச ஊழல், அதிகரித்த அரசியல் தலையீடுகள், அண்மைக்கால அதிகரித்து வருகின்ற இளைஞர்களின் வன்முறை போக்கு, பொருளாதார மந்தநிலை, வேலை வாய்ப்பற்ற தன்மை, அதிகரித்த வெளிநாட்டு கடன்கள் மற்றும் சர்வதேச நாடுகளின் தலையீடுகள் போன்றன நல்லாட்சியைக் கட்டியெழுப்புவதற்கு தடையாக உள்ளமையை கண்டுகொள்ளலாம்.

**முடிவுரை**

நல்லாட்சியினை கட்டியெழுப்புதல் எனும் செயன்முறையானது சிக்கல் மிக்கதான ஒரு செயன்முறையாக காணப்படுவதோடு இலங்கையின் நிலையான சமாதானத்திற்கு இது அவசியமானதாகவும் காணப்படுகின்றது. அதனால் நீண்டகால செயற்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது.

நாட்டில் சமத்துவத்தினை ஏற்படுத்தல் மற்றும் இன ஐக்கியத்திற்கான நிகழ்ச்சி திட்டத்தினை மேற்கொள்ளுதல் போன்றன அவசியமானதாக உள்ளது. மேலும், யாப்பு மாற்றத்தினூடாக அரசியல் உறுதிப்பாட்டினை ஏற்படுத்துவதுடன் சிறந்த பொருளாதார மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கையினையும் ஏற்படுத்துவது அவசியமாகின்றது. இவ்வாறான செயற்பாட்டு திட்டங்களை பன்மை சமூகத்தன்மைக்கு ஏற்ப நடைமுறைப்படுத்துவதன் மூலமாக இலங்கையின் நல்லாட்சியினை கட்டியெழுப்புவதறகான வாய்ப்புக்களை நிலைநாட்டிக் கொள்ளலாம்.

**உசாத்துணைகள்**


1. Sundaram, J.K. and Chowdury, A.2012. **Is Good Governance Good For Development**. UN: Bloomsbury Acadamic.
2. What is Good Governance Retrieved from www.unescap.org/sites/default/files/good-governance.pdf
3. Sri lanka Governance Report, Retrieved from www.tisrilanka.org/pup/pd/pdf/sgr2009.pdf
4. நல்லாட்சியின் தேவையும் முக்கியத்துவமும். Retrieved from http://artsveli.Blogspot.com/2011/08/blog-post 6609.html
5. நல்லாட்சியை வலியுறுத்தும் வட மாகாணசபை பிரேரணை. Retrieved from https://goo.gl//efw8ef
6. Good Governance in Sri Lanka: Challenges and Prospects. Retrieved from http://www.journals.sjp.ac.lk/index.php/IRCHS/article/view File/.../1331